(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 112.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2011, ஓகத்து 10, புதன்கிழமை, பி. ப. 1.00 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0754/ '10

1.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை பாடசாலை அதிபர்கள் சேவையில் இடம்பெறும் பாடசாலை அதிபர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) பாடசாலை அதிபர்கள் சேவையில் இடம்பெறும் பாடசாலை அதிபர்களுக்கான பற்றாக்குறை காரணமாக தற்போது பதில் பாடசாலை அதிபர்களாக நியமனம் பெற்று பாடசாலைகளில் கடமையாற்றும் பாடசாலை அதிபர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடவாரா?

(ஆ) (i) பாடசாலை அதிபர் சேவை யாப்பின் பிரகாரம் ஒவ்வோராண்டும் சனவரி 01 மற்றும் யூன் 01 ஆகிய இரண்டு திகதிகளிலும் பாடசாலை அதிபர்கள் சேவையிலுள்ள பணியாளர்களின் எண்ணிக்கையை கணிப்பீடு செய்தல் வேண்டுமென்பதையும்,

(ii) கடந்த சுமார் 15 ஆண்டு காலமாக உரிய காலத்தில் பாடசாலை அதிபர்கள் சேவையில் பதவி உயர்வுகள் வழங்கப்படவில்லையென்பதையும்,

(iii) மேற்படி (ஆ) (i) இன் பிரகாரம் பாடசாலை அதிபர்கள் சேவையிலுள்ள பணிப்பாளர்கள் எண்ணிக்கையை கணிப்பீடு செய்து உரிய விதத்தில் வெற்றிடங்கள் நிரப்பப்படுமாயின் பதில் பாடசாலை அதிபர்களை நியமிக்காது பாடசாலை அதிபர்கள் சேவை யாப்பினை நடைமுறைப்படுத்த முடியுமென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) பாடசாலை அதிபர்கள் சேவை யாப்பின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமாவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0938/ '10

2.

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் தகவல் தொழிநுட்பம் மற்றும் கணனிக் கல்வியை ஊக்குவிப்பதற்காக அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) இதற்காக 2005 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மாத்தறை மாவட்டத்தில் காணப்படும் பாடசாலைகளின் கணனி நிலையங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) மேற்படி பாடசாலைகளின் பெயர்களும் விலாசங்களும் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அடுத்த ஆண்டில் மாத்தறை மாவட்ட பாடசாலைகளில் புதிய கணனி நிலையங்களை ஆரம்பிப்பதற்கு திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், அதன் கீழ் கணனி நிலையங்கள் ஆரம்பிக்கப்படும் பாடசாலைகளின் பெயர்களும் விலாசங்களும் யாவையென்பதையும்;

(iii) இதற்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி நிலையங்கள் ஆரம்பிக்கப்படும் திகதிகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0961/ '10

3.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து, தற்போது மாணவர் உதவித்தொகை பெறும் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மாணவர் உதவித்தொகை பெறும் மாணவரொருவருக்கு மாதமொன்றில் உதவித்தொகையாகச் செலுத்தப்படும் தொகை யாதென்பதையும்;

(iii) ஓர் ஆண்டில் மாணவர் உதவித் தொகை செலுத்தப்படும் மாதங்களின் எண்ணிக்கை மற்றும் ஒரு மாணவருக்கென உதவித்தொகை செலுத்தப்படும் ஆண்டுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மாணவர் உதவித்தொகையை செலுத்துவதற்காக மாதத்தில் குறிப்பிட்ட திகதியொன்று ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின் அத்திகதி யாதென்பதையும்;

(iii) 2010 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மாதத்திற்குமென மாணவர் உதவித்தொகை வழங்க ஒதுக்கிய திகதிகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) 2010 ஆம் ஆண்டில் உரிய கால எல்லைக்கு உரியமுறையில் மாணவர் உதவித் தொகைகள் செலுத்தப்படவில்லையென்பதையும்;

(ii) அதனால் குறைந்த வருமானம் ஈட்டும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர் உதவித் தொகை பெறும் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளை உரிய முறையில் முன்னெடுக்க முடியாத நிலை தோன்றியுள்ளதென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1050/ '10

4.

கௌரவ மொஹமட் அஸ்லம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) தொண்டர் ஆசிரியர்களை, ஆசிரியர் உதவியாளர்களாக நியமனம் செய்வது தொடர்பிலான 2006.10.25 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் கல்வி அமைச்சின் ED/2/20/4/1/47 உப எனும் இலக்க, 2007.02.10 ஆம் திகதிய கடிதம் மூலம் வழங்கப்பட்ட அறிவுரைகளுக்கு அமைய, மத்திய மாகாண கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் கோரலுக்கு அமைய கண்டி மாவட்டத்தின் கட்டுகஸ்தொட்டை, கம்பளை, தெல்தெனியா, வத்தேகம, தெனுவர மற்றும் கண்டி ஆகிய கல்வி வலயங்களிலிருந்து முன்வந்திருந்த விண்ணப்பதாரிகளில் 61 பேர் நேர்முகப் பரீட்சையின் போது அப்பதவிக்கு தகுதி பெற்றுள்ளார்கள் என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(ஆ) (i) கல்வி அமைச்சுச் செயலாளரின் ED/2/29/4/1/47 List எனும் இலக்க, 2008.09.08 ஆம் திகதிய கடிதம் மூலம் இவர்களுக்கு ஆசிரியர் உதவியாளர் நியமனங்களை வழங்குமாறு மத்திய மாகாண கல்விச் செயலாளருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்பதையும்,

(ii) இதுவரை காலம் மேற்படி நியமனங்களை வழங்குவதற்குப் பதிலாக 2010.02.10 ஆம் திகதி ஆசிரியர் பயிற்சிக்கான நிலையங்களுக்கு இணைத்து, கல்வி செயலாளரினால் ED/1/20/6/24 ஆம் இலக்கத்தின் கீழ் கடிதம் அனுப்பப்பட்டுள்ளமை மட்டுமே நடைபெற்றுள்ளது என்பதையும்,

(iii) இந்நிலைமையினால் ஆசிரியர் உதவியாளர் நியமனம் பெறுவதற்குள்ள மேற்படி நபர்கள் தொடர்ந்தும் நிர்க்கதி நிலைக்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(இ) அவ்வாறாயின், இவர்களுக்கு ஆசிரியர் உதவியாளர் நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1150/'11

5.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ. எச். எம். அஸ்வர்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) திரு/புல்மோட்டை முஸ்லிம் மஹா வித்தியாலயத்தில் 2010 ஆம் ஆண்டில் ஆசிரியர்கள் 68 பேர் கடமையாற்றினார்கள் என்பதையும்;

(ii) எட்டு வருடங்கள் ஒரே பாடசாலையில் கடமையாற்றிய ஆசிரியர்களை இடமாற்றம் செய்கின்ற ஆசிரியர் இடமாற்ற கொள்கைக்கு அமைவாக மேற்படி பாடசாலையின் ஆசிரியர்கள் 30 பேர் இடமாற்றம் செய்யப்பட்டனர் என்பதையும்;

(iii) புதிதாக இடமாற்றம் பெற்றுள்ள ஆசிரியர்கள் ஏழு பேர் பாடசாலைக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள் என்பதையும்;

(iv) மாணவர்கள் 1500 பேருக்கும் அதிகமானவர்கள் கல்வி கற்கும் மேற்படி பாடசாலைக்கு ஆசிரியர்கள் 72 பேர் அவசியமாக உள்ள போதிலும், தற்போது கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை 42 மாத்திரமே என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) திரு/புல்மோட்டை முஸ்லிம் மஹா வித்தியாலயத்தில் நிலவுகின்ற மேற்படி ஆசிரியர் பற்றாக்குறையை நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1165/ '11

6.

கௌரவ அநுர திசாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 1980 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் வரை அரச ஊழியர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள விதம் வருடாந்த ரீதியில் தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) இக்காலப்பகுதியில் வாழ்க்கைச் செலவு சுட்டெண் அதிகரித்துள்ள விதம் வருடாந்த ரீதியில் தனித்தனியாக யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) அதிகரிக்கின்ற வாழ்க்கைச் செலவுக்கு ஒப்பீட்டளவில் அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கவில்லையென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இன்றேல், ஏன்?

1232/ '11

7\.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— கலாசார, கலை அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக கலாசார, கலை அலுவல்கள் அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0756/ '10

8\.

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தற்போது ஆசிரியர் பணியில் ஈடுபட்டிருக்கும் கல்வியியல் கல்லூரிகளிலிருந்து வெளியேறிய கற்பித்தல் டிப்ளோமாதாரிகளின் எண்ணிக்கையையும்,

(ii) மேற்படி கற்பித்தல் டிப்ளோமாதாரிகளில் கலைமானிப் பட்டம், விஞ்ஞானமானிப் பட்டம், பட்டப்பின்படிப்பு மற்றும் முதுகலைமானிப்பட்டம் ஆகிய பட்டக் கற்கை நிலைகள் வரை உயர்கல்வி பயின்றுள்ளவர்களின் எண்ணிக்கையையும்,

(iii) பெற்றுக் கொண்டுள்ள பட்டப்படிப்புகளுக்கமைய ஆசிரியர் சேவையின் அந்தந்த தரங்களுக்கு கற்பித்தல் டிப்ளோமாதாரிகள் நியமிக்கப்பட்டுள்ளார்களா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) சப்ரகமுவ மாகாண சபையின் கீழ் பணியாற்றும் கற்பித்தல் டிப்ளோமாதாரி ஆசிரியர்கள் பட்டம் பெற்றிருப்பார்களானால், இவர்களின் நியமனங்களை பட்டதாரி ஆசிரியர் நியமனங்களாக கருதி ஆசிரியர் சேவையில் உரிய தரங்களில் அமர்த்துவதற்கான சுற்றுநிருபமொன்று மேற்படி மாகாண சபையினால் வெளியிடப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(இ) ஏனைய கற்பித்தல் டிப்ளோமாதாரிகள் பெற்றுள்ள பட்டப்படிப்புகளுக்கமைய ஆசிரியர் சேவையில் பதவி உயர்வு பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1005/ '10

9.

கௌரவ புத்திக பத்திரண,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை கொழும்பு கடுகதி நெடுஞ்சாலையில் மாத்தறை புகுவழியான மாத்தறை நூபே- கொடகம பாதையை விஸ்தரிக்கும் கருத்திட்டத்தின் பணிகளை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி வீதியின் விஸ்தரிப்புக் கருத்திட்டப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி மற்றும் பூர்த்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி யாதென்பதையும்;

(iii) இதற்காக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள மொத்தத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) இப் பணத்தொகையில், மேற்கூறிய கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது சொத்துக்களை இழக்கும் தரப்பினருக்கு இழப்பீடு செலுத்துவதற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பார?

(ஆ) (i) இக்கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு கடன் அல்லது உதவிகளை வழங்கும் நாடு அல்ல து நிறுவனம் யாது;

(ii) கருத்திட்டத்துக்கு கிடைக்கும் மொத்தக் கடன் அல்லது உதவித் தொகை எவ்வளவு;

(iii) கடனாக இருப்பின், இக் கடனை மீளச் செலுத்தி முடிக்க வேண்டிய காலம் எவ்வளவு;

(iv) அதற்கு அறவிடப்படும் வட்டி வீதம் எவ்வளவு

என்பதை அவர் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1043/ '10

10.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 29 ஆம் திகதி 'தினமின' பத்திரிகையின் பிரதி ஆசிரியர் திரு. ரஞ்சித் பத்மசிறியின் வேலை இடைநிறுத்தப்பட்டதா என்பதையும்,

(ii) ஆமெனில், இவருக்கெதிராக உள்ள குற்றச்சாட்டுகள் யாவையென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) திரு. ரஞ்சித் பத்மசிறிக்கு எதிராக உள்ள குற்றச்சாட்டு, "பொன்சேகாவின் மனுவை விசாரணைக்கு எடுக்காமலே நிராகரிக்குமாறு சனாதிபதி உயர் நீதிமன்றத்தைக் கோருகின்றார்" எனும் தலைப்பைக் கொண்ட செய்தியொன்றை பிரசுரித்தமையா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இற்றைவரை இவரின் வேலை இடைநிறுத்தம் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1233/ '11

11.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1006/ '10

12.

கௌரவ புத்திக பத்திரண,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை – கொழும்பு கடுகதி நெடுஞசாலையின் மாத்தறை புகுமுக வாயிலான மாத்தறை நூப்பே – கொடகம வீதியை விஸ்தரிக்கும் பணிகளுக்கென சுவீகரிக்கப்படவுள்ள மொத்த நிலப்பரப்பு யாதென்பதையும்;

(ii) வீதியை விஸ்தரிப்பதன் காரணமாக இழக்கப்படும் நிரந்தர வசிப்பிடத்தைக் கொண்ட வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) காணிகள் உட்பட ஏனைய ஆதனங்களை இழப்போரின் பெயர்கள், முகவரிகள் மற்றும் ஒவ்வொரு நபருக்கும் செலுத்த உடன்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகை தனித்தனியாக யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இழப்பீட்டுத் தொகை செலுத்தும்போது நகரசபை மற்றும் பிரதேச சபை எல்லைகளில் ஒரு பேச் (01) காணித்துண்டுக்கென செலுத்தப்படும் இழப்பீட்டுத் தொகை தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) அவ்வாறு இழப்பீடு செலுத்தும்போது இழக்கப்படும் ஒரு பேச் தரிசு நிலம் மற்றும் ஒரு பேச் சதுப்பு நிலத்திற்கென செலுத்தப்படும் இழப்பீட்டுத் தொகை தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) சந்தையில் தற்போது நிலவும் ஆதன விலைகளுடன் ஒப்பிடும்போது இழக்கப்படும் காணிகள் அல்லது ஆதனங்களுக்கென செலுத்தப்படும் இழப்பீட்டுத் தொகை போதுமானதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1023/ '10

13\.

கௌரவ சஜித் பிரேமதாச,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இலங்கையில் பணவீக்கத்தை கணிப்பிடுவதற்காக தற்போது பயன்படுத்தப் படுகின்ற முறைமையியல் திருப்தியடையக்கூடிய மட்டத்தில் உள்ளதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பணவீக்கத்தை கட்டுப்படுத்துவதற்காக தற்போதைய அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் எவை என்பதையும்,

(ii) மேற்படி நடவடிக்கைகள் மூலம் போதியளவில் பணவீக்கம் கட்டுப்படுத்தப் படுகின்றதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1044/ '10

14\.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கத்தால் வாகனப் புகை பரிசோதனை ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அன்றைய திகதியிலிருந்து 2010ஆம் ஆண்டு திசெம்பர் வரை பரிசோதனை செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அதன் மூலம் பெறப்பட்ட வருமானம் வருடாந்த ரீதியாக தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும் புகைப் பரிசோதனைக்கென அமைக்கப்பட்டுள்ள நிலையங்கள் தனித்தனியாக யாவை என்பதையும்;

(iv) புகைப் பரிசோதனையின் பின்னர் இலங்கையில் போக்குவரத்திலிருந்து அகற்றப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வாகன வகைக்கேற்ப தனித்தனியாக யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1234/ '11

15\.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

கௌரவ எம்.எஸ் தௌபீக்,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக:-

"காசிமி மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் மின்சக்தி மற்றும் மின்வலு என்ற விடயம் எந்த அமைச்சருக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் ஆக்கப்பட்டு, 2011 ஏப்பிறல் மாதம் 29 ஆம் திகதிய 1703/46 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.07.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 2.

கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— அரச கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, அரச கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு, 1964 ஒற்றோபர் 1 ஆம் திகதிய 14186 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையின் (v) ஆம் பகுதியை திருத்தஞ் செய்து அச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) உட்பிரிவின் கீழ் கடற்றொழில் நீரியல் வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 யூன் மாதம் 30 ஆம் திகதிய 1712/21 ஆம் இலக்க விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.07.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — குழு

* 4.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — குழு

* 5.

ஊழியர் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 6.

கடல்கடந்த ஊழியர்கள் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 7.

ஓய்வூதியங்கள் (விளைவாந்தன்மையினவான ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 8.

ஊழியர் சகாய நிதியம் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 9.

நிதித்தொழில் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 10.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (3) ஆம் உபபிரிவின் கீழ், நிதி திட்டமிடல் அமைச்சரினால், துறைமுகம் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011 ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதிய 1703/1 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.07.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 11.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் நிதி திட்டமிடல் அமைச்சரினால், உற்பத்தி வரி தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011 ஏப்பிறல் மாதம் 21 ஆந் திகதிய 1702/19 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.07.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 12.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் நிதி திட்டமிடல் அமைச்சரினால், உற்பத்தி வரி தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011 மே மாதம் 16 ஆம் திகதிய 1706/3 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.07.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 13.

கைத்தொழில், வாணிப அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 (1) ஆம் பிரவின் கீழ் கைத்தொழில் மற்றும் வர்த்தக அலுவல்கள் அமைச்சரால் நிதி திட்டமிடல் அமைச்சரின் ஒருமைப்பாட்டுடன் செஸ் வரி தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011 மார்ச்சு மாதம் 04 ஆந் திகதிய 1695/31 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.07.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 14.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— தேயிலை சிறு பற்றுநில அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— தேசிய அரசுப் பேரவையின் 1975 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தேயிலை சிறு பற்றுநில அபிவிருத்திச் சட்டத்தின் 15 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தில் 22 ஆம் பிரிவின் கீழ் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 ஏப்ரல் மாதம் 11 ஆம் திகதிய 1701/1 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.07.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 15.

சுகாதார அமைச்சர்,— இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.06.11ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 16.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 17.

தொழிநுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை 2008,— 1994ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க விஞ்ஞான தொழிநுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.12.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழிநுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 18.

மின்வலு, சக்தி அமைச்சர்,— அணுசக்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை 2008,— 1969ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, அணுசக்தி அதிகாரசபைச் சட்டத்தின் 34ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.06.30 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான அணுசக்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(மின்வலு, சக்தி பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 19.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தில் 5 (ஆ) மற்றும் 5 (இ) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தில் 25 ஆம் பிரிவின் கீழ் இலங்கைத் தேயிலைச் சபையினால் ஆக்கப்பட்டு, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு, 2010, ஒற்றோபர் மாதம் 27 ஆம் திகதிய 1677/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2011.01.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 20.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 21.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் அனுமதி பெற்ற ஹோட்டல்களுக்குள் மதுபானம் பரிமாறுவது தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011, சனவரி மாதம் 21 ஆம் திகதிய 1689/20 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.02.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 935.)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

22.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

23.

இலங்கை பிரயோக புள்ளிவிபரவியல் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

24.

தெஹிவளை நெதிமாலை பௌத்த கலாச்சார நிலையம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

25.

ஐக்கிய இலங்கை பிக்குமார்களுக்கான அபிவிருத்தி அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

26.

தேசமான்ய ரவீந்திர வணிகசேகர ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

27.

இலங்கை ஔடதங்கள் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

28.

ஜோன் செனவிரத்ன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

29.

அங்கவீனர்களுக்கான ஆலோசனை உதவிகளையும் வழங்குவதற்கான திதொரா தியேட்டர் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

30.

ஸ்ரீ தம்மாலங்கார சமூக சேவைகள் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.